# இயற்கை வாதம் : பேரினப் பொருளியல் ஆய்வின் தோற்றம்

*க. ஞானேஸ்வரன், முதுநிலை விரிவுரையாளர்,*
*பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை*

அறிமுகம்

ஒஸ்றியப் போர் (Austrian War) ஆரம்பித்த 1741 முதல் அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனம் நிகழ்ந்த 1776 வரையிலான 35 ஆண்டுகள் காலப்பகுதி ஐரோப்பிய வரலாற்றைப் பொறுத்த வரையில் மட்டுமல்லாமல் பொருளியல் சிந்தனை வரலாற்றைப் பொறுத்தமட்டடில் கூட மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பகுதியாகும் (Ernesto Screpanti and Stefano Zamagni 1993:43) இக்காலப் பகுதியில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல் நெருக்கடிகளும் அதன் தொடர்பான பல யுத்தங்களும்[1], இராணுவ ரீதியிலும் அரசியல், பொருளாதார அடிப்படைகளிலும் ஐரோப்பாவில் முதன்மை நாடாக இறுதியில் இங்கிலாந்தினை நிலை நிறுத்தின. மேலும், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் முதலாளித்துவ முறை நோக்கிய முறைமாற்றச் செய்முறையும் இக்காலப்பகுதியில் தீவிரமடைந்து கொண்டிருந்தது. இவற்றிற்கு அப்பால் இக்காலப் பகுதியிலேயே 'அறிவுக்கிளர்ச்சி' (Enlightenment) எனப்படுகின்ற கலாசாரப் புரட்சியும் உச்சநிலை கண்டது எனலாம். ஒரு நிகழ்வு குறித்துக் காரண காரியத்தொடர்பினை அனுபவ ரீதியிற் கண்டறியும் விஞ்ஞானத் தன்மையே இந்த அறிவுக்கிளர்ச்சியின் அடிப்படையாகும். இந்த அறிவுக்கிளர்ச்சியானது பொருளியற் சிந்தனையின் வரலாற்றிலும் இக்காலப்பகுதியில் தனது தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. ஐரோப்பாவிற் சுமார் மூன்று நூற்றாண்டுகளாகச் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ள வணிகவாதக் கோட்பாடுகள் மீது பல்வேறு அடிப்படைகளில் தர்க்கரீதியாகத் தாக்குதல்கள் தொடுக்கப்படுவதற்கு அறிவுக்கிளர்ச்சி வழிவகுத்தது எனலாம்.

அறிவுக்கிளர்ச்சியின் செல்வாக்கிற்குட்பட்ட வகையில் இக்காலப்பகுதியில் தோன்றிய பொருளியற் சிந்தனைகள் ஒரே ஒப்புமை கொண்ட கோட்பாட்டு அணுகுமுறையினை (a homogeneous theoretical approach) க் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவற்றின் ஏற்புடைத் தன்மையும், ஐரோப்பிய அளவிற் காணப்படாமல் தனிப்பட்ட நாடுகளுக்குள் மட்டுப் பட்டவையாக இருந்துள்ளன. அக்காலப்பகுதியின் பிரதான பொருளியற் சிந்தனைக் குழாத்தினராக (school of economic thought) பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இயற்கைவாதிகளும் இத்தாலியைச் சேர்ந்த மிலன் (Milan), நேபிள்ஸ் (Naples) சிந்தனைக் குழாத்தினரும் கருதப்படுகின்றனர்.[2] எவ்வாறாயினும் இவர்களுள் பிரான்ஸிஸ் குவெஸ்னே (Francis Quesnay (1694 – 1774) அவர்களைத் தலைமைப் பிரதிநிதியாகக் கொண்ட பிரான்சின் இயற்கைவாதிகளே மிகப் பிரதான குழாத்தினராகக் கருதப்படுகின்றனர். ஏனெனில் இவர்களின் இயற்கைவாதக் கோட்பாடே வணிக வாதக் கோட்பாட்டிலிருந்து, பழம் பொருளியற் கோட்பாடு நோக்கி நிகழ்ந்த நிலை மாற்றத்தில் இடை நிலைப் பங்கொன்றினை ஆற்றியிருந்துள்ளது. (Mahoto Itoh, 1988:6)

இயற்கை வாதத்தின் முன்னோடிகளாக பொஸ்கில்பேர்ட் (Bosiguillebert, 1646-1714), வேபன் (Vauban, 1633-1707) போன்றோர் கருதப்படினும் இயற்கைவாதத்தின் பிரதான பிரதிநிதியாகக் குவெஸ்னே கருதப்படுகின்றார். 1756, 1757, 1758 ஆகிய மூன்று ஆண்டுகளில் வெளிவந்த குவெஸ்னே அவர்களின் பல்வேறு எழுத்தாக்கங்கள்[3] இயற்கைவாதப் பொருளாதாரச் சிந்தனைகளின் பிரதான அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன. குவெஸ்னேயின் கருத்துக்களை ஏற்றுத் தம் எழுத்தாக்கங்களினால் அவற்றை மேலும் பலர் வலிமைப்படுத்தினர். அவர்களுள் ரேர்கோ (Turgot 1727 - 1781), கொண்டிலக் (Condillac 1715 - 1780), பாஃதோ (Baudeau), நீமொர் (Nemour), மிராபோ (Mirabeau), ரோஸ்னே (Torsne) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இயற்கைவாதம் தொடர்பான

எழுத்தாக்கங்களின் பெரும்பகுதி 1736 முதல் 1758 வரையிலான இரு தசாப்தகாலப்பகுதியில் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்துள்ளன (Charles Gide and Charles Rist, 1915:23). செல்வத்தின் தன்மை, அதன் உற்பத்தி, சமூகத்தில் அதன் பங்கீடு என்பவை குறித்த விதிகள் (Laws) தொடர்பான பொதுவான உண்மைகளை (Universal Truth)க் கண்டறிவதற்கு விஞ்ஞான பூர்வமான திட்பமான வழிமுறைகளைக் கண்டறிய முடியுமென குவெஸ்னே கருதினார் (Alexander Gray and A.E. Thompson, 1931: 84). குவெஸ்னே தனது எழுத்தாக்கங்கள் மூலமாகத் தேசிய நலனை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதாரத்தில் தீவிர அரசாங்கத் தலையீட்டினை வற்புறுத்துகின்ற வணிகவாதக் கண்ணோட்டத்தினை முற்றாக நிராகரித்து, இயற்கை நியதியின் (Natural order) அடிப்படையிலமைந்த அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையினை (Laissez – faire) முன்வைக்கின்றார்.

## இயற்கை வாதத்தின் தோற்றப் பின்னணி

பிரான்ஸின் மன்னரான பதினான்காம் லூயி(Louis xiv 1643 – 1715) உம், 1661 முதல் 1683 வரையில் லூயியின் திறைசேரி அமைச்சராக இருந்துள்ள கோல்பேர்ட் (Colbert) அவர்களும் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வணிகவாதக் கொள்கைகளின் அடிப்படையில் பிரான்ஸில் அறிமுகப்படுத்திய கைத்தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் போதிய வெற்றியளிக்கத் தவறின. அக்காலப் பகுதியில் இங்கிலாந்தினைப்போல் அல்லாமல் பிரான்ஸ் அதிகளவிற்கு விவசாய பொருளாதார அடிப்படையினைக் கொண்டிருந்த நிலைமையொன்றில், தனது குடியேற்றங்களையொட்டி நிகழ்ந்த அந்நாட்டின் யுத்தங்களும், வேர்செயில்ஸ் அரண்மனை (Versailles Palace) நிர்மாணம் போன்ற ஆடம்பரத்தேவைகளையொட்டி நிகழ்ந்த ஆட்சியாளர்களின் அதிகரித்த செலவீடுகளும் அந்நாட்டின் விவசாயத்துறையின் மீது அரசாங்கத்தின் வரிச்சுமையினை அதிகரித்தன. பிரான்ஸின் உயர் குடியினரும், பிரபுக்களும் பெற்றிருந்த வரிவிலக்குகள் காரணமாக அதிகரித்த வரியினை

முழுவதுமாக வறிய சிறுவிவசாயிகளே சுமக்க வேண்டியிருந்தது. மேலும், பிரான்ஸின் உள்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் விவசாய விளைபொருட்களின் உள்நாட்டு விலைகளைக் குறைந்த மட்டங்களிற் பேணுவதற்காக விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிகளின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் அந்நாட்டின் விவசாயத்துறையினைப் பாதிப்பதாக அமைந்தன.[4] நாட்டின் பொருளாதாரத்தின் முதன்மைத்துறையாக விவசாயமும், அதன் முதுகெலும்பாக சிறுவிவசாயிகளும் இருந்து வந்த வேளையில், அரசாங்கத்தின் அதிகரித்த வரிச்சுமைகளினால் அவர்களின் செயற்பாடுகள் முடக்கப்படுகின்ற இத்தகைய சூழ்நிலையொன்றிலேயே பிரான்ஸின் பொருளாதாரத்தினை மறு சீரமைப்பதில் விவசாயத்துறையின் பங்கினையும், அத்துறையின் முக்கியத்துவத்தினையும் கோட்பாட்டு அடிப்படையில் வலியுறுத்துகின்ற இயற்கைவாதிகள் குழாம் ஒன்று அந்நாட்டில் தோற்றம் பெற்றது.

## இயற்கை நியதி (The Natural Order)

இயற்கைவாத முறையானது 'இயற்கை நியதி' என்ற எண்ணக்கருவினை மையமாகக் கொண்டு உருவான ஒன்றாகும்.[5] மனித சமுதாயம் இரு வகையான சட்டங்களைக் கொண்டிருப்பதாக இயற்கைவாதிகள் கருதினர். ஒன்று இயற்கை விதிகள் (Natural Laws) மற்றையது, மனிதர்களினால் இயற்றப்பட்ட நேர்க்கணியச் சட்டங்கள் (Positive Laws) ஆகும்.[6] பிரபஞ்சம் எங்கும் செல்லுபடியாகக்கூடிய இயற்கை விதிகள் பல காணப்படுகின்ற போது, இவற்றினை மாறாத்தன்மை கொண்ட, தடுக்க முடியாத, மேலான சட்டங்களாக இயற்கைவாதிகள் கருதினர். மனிதர்களினால் இயற்றப்படுகின்ற நேர்க்கணியச் சட்டங்கள் யாவும் இயற்கை நியதிக்குக் கீழ்ப்பட்டவையே எனவும், அவை இயற்கை நியதியை அனுசரித்து இயற்கை விதிகளுக்கு உட்பட்டவையாக இருந்தால் மட்டுமே மக்களுக்கு அவற்றினால் உயர்ந்த பட்ச மகிழ்ச்சியினை உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர்கள் கருதினர். அதேவேளை

இயற்கை நியதியுடன் முரண்படுகின்ற வகையில் உருவாக்கப்படுகின்ற மனிதர்களின் சட்டங்கள் பெருந்தீங்கான விளைவுகளையே சமூகத்தில் இட்டுவரும் எனவும் அவர்கள் கருதினர் (Ingrid Hahne Rima, 1978:51)

உண்மையில் மனித சட்டங்கள் எவையுமில்லாத ஆட்சியே இயற்கை நியதிக்கு அமைவானதென இயற்கைவாதிகள் கருதவில்லை.[7] மாறாக அவர்கள் இயற்கை நியதியுடன் முரண்படுகின்ற, அவசியமற்ற சட்டங்கள் அகற்றப்பட்டு, எண்ணிக்கையிற் குறைவானவையும், இயற்கை நியதியினை அனுசரிப்பவையுமான சட்டங்கள் செயற்பாட்டில் இருப்பதனையே ஆதரித்தனர். மேலும், அவர்கள் சமூக ஒழுங்கமைப்பினை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்கள் பரம்பரை அடிப்படையிலான முடியாட்சி முறையினையும், பிரபுத்துவ முறையினையும் தீவிரமாக ஆதரிப்பவர்களாக இருந்தனர்.[8] மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் முழுத்தேசத்திற்கும் ஏற்றவகையில் தனிநபர் நலன்களையும், மக்கள் குழுக்களின் நலன்களையும் இணக்கப்படுத்த முடியாதவர்கள் என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் அரசியற் தன்னாட்சி உரிமை (Political Liberty) என்ற தத்துவத்தினை நிராகரித்தனர். பரம்பரை முடியாட்சி முறையின் கீழ் மன்னர்கள் ஆட்சியில் குறிப்பிடத்தக்க காலத்திற்கு நிரந்தரமாகவும், அதனால் பெருமளவிற்கு சுயநலமின்றியும் இருப்பதனால் முழுச்சமூகத்தின் நலனையும் அவர்களால் பேண முடியும் எனக்கருதினர். சமூகத்தில் ஒவ்வொரு தனிநபரும் இயற்கை விதிகளை உள்ளுணர்வால் அறிந்திருப்பின், நியாயமாக ஒவ்வொருவரும் இயற்கை நியதிக்கு இணங்கிச் செயற்படுகின்றபோது மன்னர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் மிகச் சொற்பமாகவே இருக்குமென அவர்கள் நம்பினர். இந்த வகையில் இயற்கைவாதிகள் பாராளுமன்ற ஆட்சிமுறையின் ஆதரவாளர்களுமல்லர். அதேவேளை அவர்கள் தேசநலனை முன்னிறுத்தித் தீவிரமாகச் செயற்படும் சர்வாதிகார ஆட்சிமுறையின்

ஆதரவாளர்களுமல்லர். மாறாக இயற்கை நியதியினை அனுசரத்துச் செயற்படுவதே மகிழ்ச்சியான வாழ்வினை உறுதிப்படுத்துவதற்கான வழி என்பதனை அறிந்து கொண்டு, தமது செயற்பாடுகளை இயற்கை நியதிக்குள் வரையறுத்துக் கொள்கின்ற மன்னராட்சி முறையினையே ஆதரித்தனர்.

## தலையிடாக் கொள்கை (Laissez – Faire)

சட்டமியற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் மிகக்குறைவான மட்டம் ஒன்றில் வரையறுத்துக் கொள்ள வேண்டும் என இயற்கைவாதிகள் கருதியதன் அடிப்படையில் அவர்கள் அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையினை முன்வைத்தனர். இதன்படி, எந்தவொரு சட்டமியற்றும் நிறுவனத்தினதும் மிகப்பயனுள்ள செயற்பாடென்பது அவர்களைப் பொறுத்தவரையில் பயனற்ற சட்டங்களை நீக்குவதேயாகும்.[9] தலையிடாக் கொள்கையானது இயற்கைவாதிகள் உலகிற்கு மேற்கொண்ட ஒரு முக்கிய பங்களிப்பாகக் கருதப்படுகின்றது.[10] தனியார் சொத்துரிமையினைப் பேணுவது, வெளிநாட்டுப்படை எடுப்புக்களிலிருந்து நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பினை வழங்குவது, உள்நாட்டில் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுவது, சுமுகமான நிர்வாகத்திற்கு வகைசெய்வது ஆகிய தேவைகளை நிறைவேற்றக் கூடியவாறான அரசாங்கத்தின் குறைந்தபட்சத் தலையீடும், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான அரசாங்கச் சட்டங்களும் அமைய வேண்டும் எனக்கருதினர். வணிக வாதிகளினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் தீவிர தலையிடும் கொள்கையினை அடம் சிமித்திற்கு முன்னரே நிராகரித்தவர்கள் இயற்கைவாதிகளேயாவர். அடம் சிமித் இங்கிலாந்தில் தோன்றிய கைத்தொழில் புரட்சியினையடுத்து, அங்கு செயற்பட ஆரம்பித்த விலைப் பொறிமுறையானது அந்நாட்டின் சாதன ஒதுக்கீட்டில் செயற்றிறன் கொண்டிருப்பதனை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் பொருளாதார தலையீடுகள் விலைப்பொறிமுறையின் செயற்றிறனைப் பாதிக்கும்

என்றவகையிலேயே தலையிடாக் கொள்கையின் அவசியத்தினை வற்புறுத்துகின்றார். ஆயின் இயற்கைவாதிகளின் பெரும்பாலான எழுத்தாக்கங்கள் இங்கிலாந்தின் கைத்தொழிற் புரட்சி ஆரம்பிப்பதற்கு முன்னரே வெளிவந்துள்ள நிலைமையில் அவர்கள் விலைப்பொறி முறையின் செயற்றிறனின் அடிப்படையில் அல்லாமல் இயற்கை நியதிக்கு முரண்படக்கூடிய அவசியமற்ற சட்டங்கள் யாவும் நீக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையினை முன்வைத்தனர். இந்தவகையில் 1751 முதல் 1776 வரையிலான காலப்பகுதி பொருளியல் சம்பந்தப்பட்ட வரையில் 'தலையிடாக் கொள்கைப் புரட்சி வருடங்கள்' (the years of the laissez – faire revolution) எனக்குறிப்பிடப்படுவதற்கு இயற்கைவாதிகளே காரணமாவர்[11]

## தேறிய உற்பத்திப் பொருள் **(Net Product)**

சமூக நிகழ்வுகள் அனைத்தையும் இயற்கைவாதிகள் இயற்கை நியதியுடன் தொடர்புபடுத்தி நோக்க முற்பட்டமையினால் அவர்களைப் பொருளியலாளர் என்பதனைவிடவும் சமூகவியலின் தோற்றுநர்கள் (founders) எனக்கருதுவதே கூடுதற்பொருத்தமானது போல் தோன்றினும் அவர்களின் அனைத்துக் கோட்பாடுளிலும் தூய பொருளாதார தோற்றப்பாடு (economic phenomenon) ஒன்று அடிப்படையாக அமைந்து காணப்பட்டுள்ளது. அதுவே, அவர்களைப் பொருளாதார இயலின் முன்னோடிகளாகக் கருதக் காரணமாக அமையக்கூடும். அது யாதெனில், நிலம் (land) என்ற காரணியைப் பொருளாதாரத்தின் முதன்மையான உற்பத்திக் காரணியாக அடையாளம் செய்து, தமது முழுமையான இயற்கைவாத முறைமையின் மிகமுக்கிய அம்சமாக அதனை அமைத்துக் கொண்டதாகும்.[12] இயற்கைவாதிகளின் நோக்கில், பொருளாதாரம் ஒன்றில் இடம்பெறும் ஒவ்வொரு உற்பத்தி நடவடிக்கையும் கட்டாயமாகச் சில இழப்புக்களுடன் கூடியதாக அமைகின்றது. வேறுவகையிற் சொல்வதாயின், புதிய செல்வத்தின்

உற்பத்தியின்போது, பொருளாதாரத்தில் ஏற்கனவே உள்ள குறிப்பிட்டளவான செல்வம் அழிந்து போகின்றது[13]. ஒரு உற்பத்தியின்போது பெற்ற புதிய செல்வத்திலிருந்து அக்குறிப்பிட்ட உற்பத்தியின் போது அழிந்துபோன செல்வத்தின் பெறுமதியினைக் கழித்துப் பெறப்படுவதே இயற்கைவாதிகளின் 'தேறிய உற்பத்திப் பொருள்' என்ற எண்ணக்கருவாகும். இயற்கைவாதிகள் ஒரு நாட்டின் செல்வம் என்பது இயற்கையின் உதவியுடன் விவசாயம், மீன்பிடித்தொழில், சுரங்கம் அகழ்தல் ஆகியவற்றினை உள்ளடக்கும் பொருளாதாரத்தின் முதன்மைத்துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் என வரையறை செய்தனர்[14]. இம்மூன்றுடன் தொடர்புடைய உற்பத்திகளும் நிலம் என்ற உற்பத்திக் காரணியினைப் பிரதான அடிப்படையாகக் கொண்டவை என்பதனாலேயே ஏனைய உற்பத்திக் காரணிகளைத் தவிர்த்து நிலத்தினை மட்டும் அவர்கள் செல்வத்தின் மூலாதாரமாகக் கருதினர்[15].

மேலும், நிலத்தில் மட்டுமே ஊழியத்தின உழைப்பிற்கு இயற்கை (nature) உதவியாக அமைவதாக அவர்கள் கருதினர். உண்மையில் நிலத்தில் இயற்கையின் உதவியும் இணைவதனாலேயே ஒரு புசல் தானியத்தினை விதைக்கின்ற ஒரு விவசாயி நிலத்தில் ஐந்து புசல் தானியத்தை பின்னர் அறுவடை செய்ய முடிகின்றது என அவர்கள் கருதினர். இந்தவகையில் இயற்கையின் ஒத்துழைப்பு நிலத்திற்கூடாகவே வெளிப்படுத்தப்படுவதனால் அதனைச் செல்வத்தின் மூலாதாரமாகக் கருதி, முதன்மை உற்பத்திச் சாதனமாக அதனை அடையாளம் செய்தனர். விவசாயம் தவிர்ந்த மேற்கூறப்பட்ட ஏனைய இரு தொழில்களிலும்கூட இயற்கையின் உதவியே அவற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணமென அவர்கள் கருதினர். ஆக, இயற்கையின் உதவியுடன் இம்மூன்று தொழில்களின் மூலமும் நிலத்தில் தேறிய உற்பத்திப்பொருள் உருவாக்கப்படுகின்றது. இத்தேறிய உற்பத்திப்பொருள் அதன் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் ஊழியத்தின் பிழைப்பு மட்டத்தேவைகளுக்கு மேலதிகமாக உள்ள பொருளாதார மிகையாக அமைகின்றது. அதன் அதிகரிப்பானது

பொருளாதாரத்தின் செல்வ இருப்பின் அதிகரிப்பினையும், அதனால் பொருளாதார வளர்ச்சியினையும் பிரதிபலிப்பதாக அவர்கள் முடிவுசெய்தனர்.

## உற்பத்தித்தன்மையுள்ள உழைப்பும் உற்பத்தித்தன்மையற்ற உழைப்பும் (Productive Labour and Unproductive Labour)

இயற்கைவாதிகள் பொருளாதாரம் ஒன்றில் உள்ள மக்களை மூன்று குழுக்களில் வகைப்படுத்தினர். நில உடைமையாளர் வகுப்பு (the proprietor class), பயிரிடுவோர் வகுப்பு (the cultivator class), உற்பத்தி (தேறிய) எதனையும் நிகழ்த்தாத வகுப்பு (the sterile class) என்பனவே அவையாகும். விவசாயத்துறையானது தேறிய உற்பத்திப் பொருள் ஒன்றினை உருவாக்கக் கூடிய தனித்துவத்தினையும், அற்புத சக்தியினையும் கொண்டிருப்பதனால்[16] இம்மூன்று வகுப்பினரில் முதலிருவகுப்பினரினதும் உழைப்பினை உற்பத்தித் தன்மையுள்ள உழைப்பு என வணிகவாதிகள் அடையாளம் செய்தனர். இவர்கள் தவிர சுரங்கம் அகழ்வோர்[17], மீன்பிடிப்போர் ஆகியவர்கள் நிலத்தில் உற்பத்தியினை மேற்கொள்கின்றபோது, இயற்கையின் உதவியினால் அவர்களினாலும் தேறிய உற்பத்திப்பொருட்களை உருவாக்க முடிவதனால் அவர்களின் உழைப்பும் உற்பத்தித் தன்மையுள்ள உழைப்பு என இயற்கைவாதிகளினால் வரையறை செய்யப்பட்டது[18].

கைத்தொழில், வர்த்தகம் உட்பட நாட்டின் அனைத்துச் சேவைத்துறை என்பவை சார்ந்த மக்களின் உழைப்புக்கள் யாவும் உற்பத்தித் தன்மையற்ற உழைப்பு என இயற்கைவாதிகளினால் வகைப்படுத்தப்பட்டது. கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தொழில் முடிவுப் பொருட்களின் பெறுமதியானது அவற்றில் உள்ளடக்கிய மூல இடைப்பொருளின் பெறுமதியினை கூடுதலானதாயினும், அக்கூடுதற் பெறுமதியானது, அவ்விறுதிப் பொருட்களின் உருவாக்கச் செய்முறையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியத்தின் உழைப்பின் பெறுமதிக்குச் சமமானதென அவர்கள்


கருதினர்[19]. இயற்கைவாதிகளைப் பொறுத்தவரையில் வர்த்தகமானது சமபெறுமதிகளிலான பொருட்களின் பரஸ்பர பரிமாற்றத்திற்கு வகைசெய்கின்றதேயன்றி தேறிய உற்பத்திப்பொருள் எதனையும் உருவாக்குவதில்லை. இந்தவகையில் ஒரு நாட்டின் செல்வப் பெருக்கத்திற்கு வர்த்தகர்களின் பங்கே முதன்மையானதென்ற வணிகவாதிகளின் முன்னைய கருத்திலிருந்து முற்றாகவே வேறுபட்ட கருத்தினை இயற்கைவாதிகள் கொண்டிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் தேறிய உற்பத்திப் பொருளின் உருவாக்கத்திற்கான பங்களிப்பு என்றவகையில் நோக்கும்போது, கைவினைஞர்களின் உழைப்பிலும் பார்க்க குறைவானதொரு முக்கியத்துவத்தினையே அவர்கள் வர்த்தகர்களின் உழைப்பிற்கு வழங்கினர். கைத்தொழிலும் வர்த்தகமும் மனித இனத்தின் நீடிப்பிற்கும், நலனுக்கும் அவசியமானவையெனினும் அவை தேறிய உற்பத்திப்பொருள் எதனையும் உருவாக்குவதில்லை என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையிலிருந்தே அத்துறைகள் சார்ந்த உழைப்புக்களை இயற்கைவாதிகள் உற்பத்தித்தன்மையற்றவை என வகைப்படுத்தினர்[20].

## செல்வத்தின் சுற்றோட்டம் : பொருளாதார அட்டவணை **(The Circulation of Wealth: The Tableau Economique)**

பொருளாதார இயலுக்கு இயற்கைவாதிகள் மேற்கொண்ட பிரதான பங்களிப்பாக அவர்கள் மேற்கூறப்பட்ட மூன்று வகுப்பினரிடையேயும், செல்வத்தின் உருவாக்கம், அதன் சுற்றோட்டம் என்பவற்றினைப் பொருளாதார அட்டவணையின் மூலம் விளக்கியமை கருதப்படுகின்றது. வில்லியம் ஹாவி (William Harvey) என்பவர் மேற்கொண்ட, மனித உடலிலான குருதிச் சுற்றோட்டத்தின் கண்டு பிடிப்பினால் தூண்டப்பட்ட குவெஸ்னே, பொருளாதார அட்டவணை ஒன்றினை உருவாக்கி, அதன் மூலம் தாம் வகைப்படுத்திய பொருளாதார வகுப்புக்கள் ஒவ்வொன்றும் ஏனைய வகுப்புக்கள் மீது மேற்கொள்ளும் பரஸ்பர செலவீடுகள் மூலம் அவை

ஒவ்வொன்றும் மற்றையதன் மீது தங்கியிருப்பதனையும், அதே வேளை ஒன்று மற்றொன்றுக்கு ஆதரவாக, ஆதாரமாக அமைவதனையும் விளக்குவதற்கு முயன்றுள்ளார். மிராபோ (Mirabuea) வின் பார்வையில் உலகு தோன்றியபின் நிகழ்த்தப்பட்ட முப்பெரும் கண்டுபிடிப்புக்களில், எழுத்து, பணம் என்பவற்றிற்கு அடுத்த மூன்றாவது கண்டுபிடிப்பாக இப்பொருளாதார அட்டவணையின் உருவாக்கம் கருதப்பட்டிருந்துள்ளது[21].

**பொருளாதார அட்டவணை**




மூலம் : Marquis de Mirabeau quoted in Ingrid Hahne Rima (1978)

மிராபோ அவர்களின் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட மேலுள்ள பொருளாதார அட்டவணையானது வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிராத, ஒரு மூடப்பட்டதும்,

பெறுமானத்தேய்வுகளை மறுவைப்புச் செய்யப் போதுமானதுமான சேமிப்புக்களை மட்டுமே மேற்கொள்வதுமான வளர்ச்சியற்ற (stationary) பொருளாதாரம் ஒன்று தொடர்பானதாகும். இந்த அட்டவணையின்படி, ஒரு பயிர்ச்செய்கையாண்டின் ஆரம்பத்தில் பயிர்ச்செய்கையாளர்களினால் விவசாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற 2000 லிவ்றஸ் (Livres)[22] பெறுமதியான முதலீடானது அதற்குச் சமமான பெறுமதியில், அதாவது 2000 லிவ்றஸ் பெறுமதியான தேறிய உற்பத்திப் பொருளை உருவாக்கியுள்ளது. இத்தொகையானது தொடர்புடைய குத்தகைப் பயிர்ச்செய்கையாளர்களினால் நில உடைமையாளர்களுக்கு வாடகையாகச் செலுத்தப்படுவது முதலாவது நிரலிலிருந்து இரண்டாவது நிரல் நோக்கிய நேரான பாய்ச்சலாக மேற்படி அட்டவணை காண்பிக்கப்பட்டுள்ளது. இதுவே செல்வத்தின் சுற்றோட்டத்தின் ஆரம்பமாக அமைவது குறிப்பிடத்தக்கது. நில உடைமையாளர்களினால் பெறப்படுகின்ற இந்த வாடகை வருமானமானது இடப்புறம் நோக்கி, விவசாயப் பொருட்களின் கொள்வனவினையொட்டி பயிர்ச்செய்கையாளர்களின் மீதும் வலப்புறம் நோக்கி, கைத்தொழிற் பொருட்களின் கொள்வனவினையொட்டி, உற்பத்தி எதனையும் நிகழ்த்தாத (sterile) வ்குப்பினர் மீதும் செலவிடப்படுவதனை இரு புறங்களையும் நோக்கி நிகழுகின்ற தலா 1000 லிவ்றஸ் பெறுமதிகளிலான பணப்பாய்ச்சல்கள் காண்பிக்கின்றன.

மேற்படி இருபுறங்கள் நோக்கியும் ஏற்படுகின்ற சம அளவிலான பணப்பாய்ச்சல்களில், பயிர்ச்செய்கையாளர்களின் மீது மேற்கொள்ளப்பட்ட செலவீடான 1000 லிவ்றஸ் மட்டுமே மீண்டும் அதேபெறுமதியில் தேறிய உற்பத்திப் பொருளை உருவாக்க, அது மறுபடியும் வாடகை என்ற வடிவத்தில் நில உடைமையாளர்களை நோக்கிச் சுற்றோட்டத்தில் பாய்வது நேரான, முறிவுபட்ட கோட்டின் மூலம் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது. நில உடைமையாளர்கள் இப்பொழுது தாம் பெறுகின்ற 1000 லிவ்றஸ்

வாடகை வருமானத்தினை மறுபடியும் சமதொகைகளாகப் பகிர்ந்து தலா 500 லிவ்றஸ் என்ற வகையில் அட்டவணையின் இடது புறமாகப் பயிர்ச்செய்கையாளர்கள் மீதும் வலது புறமாக உற்பத்தி எதனையும் நிகழ்த்தாத (sterile) வகுப்பினர் மீதும் செலவிடுகின்றனர். இப்பொழுதும் பயிர்ச்செய்கையாளர்கள் மீதான நில உடைமையாளர்களின் செலவீடுகள் மட்டுமே அதே பெறுமதியில், அதாவது 500 லிவ்றஸ் பெறுமதியில் தேறிய உற்பத்திப் பொருளை உருவாக்குகின்ற போது, அத்தொகையானது மீண்டும் முழுவதுமாக வாடகையாக நில உடைமையாளர்களை நோக்கிச் சுற்றோட்டத்திற் செல்வதும், அது மீண்டும் தலா 250 லிவ்றஸ் என்ற பெறுமதிகளில் முன்னர் போன்றே சமமாகப் பகிர்ந்து செலவிடப்படுவதனையும் அட்டவணை காண்பிக்கின்றது.

இயற்கைவாதிகளின் இப்பொருளாதார அட்டவணை தொடர்பான விளக்கத்தின் பின்னணியில் முதலாவது நிரலின் கீழ் வருகின்ற விவசாயம் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற செலவீடுகள் மட்டுமே தேறிய உற்பத்திப் பொருள் ஒன்றினை உருவாக்குகின்றன எனவும், அந்த மிகை உற்பத்திப் பொருளானது எப்பொழுதும் முதலீட்டின் 100 சதவீதமானதாக உள்ளது எனவும் இரு முக்கிய எடுகோள்கள் கைக்கொள்ளப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும். செல்வத்தின் சுற்றோட்ட பாங்கத்தினைப் பொறுத்தே அது பெருக்கமடைவதும், சுருக்கமடைவதும் அமையும் என்பதனையும் மறைமுகமாக இந்த அட்டவணை புலப்படுத்த முற்படுகின்றது எனலாம். செல்வத்தின் சுற்றோட்டமானது விவசாயத்துறையினை நோக்கி ஏற்படுவது அதன் பெருக்கத்திற்கும் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளை நோக்கி நிகழ்வது அதன் சுருக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பதான கருதுகோள் ஒன்றினைப் பொருளாதார அட்டவணை கொண்டிருக்கின்றது. இவ்வட்டவணையின் பின்னணியிலுள்ள கருத்துக்கள் எவை எனக்கூறுவது, அக்கருத்துக்களை அது எவ்வாறு புலப்படுத்துகின்றது என்பதனை விளக்குவதனை விடவும் எளிதானதென கிரே அலெக்ஸாண்டர்,

தோம்சன் அலன் ஆகிய இருவரும் மிகச்சரியாகவே குறிப்பிட்டுள்ளனர்[23].

பொருளாதாரம் ஒன்றிற்காணப்பட்டுள்ள மூன்று வகுப்பினர்களில், நில உடைமையாளர் வகுப்பினை மத்தியிற் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அட்டவணையில் வலம், இடம் ஆகிய இருபக்கங்களையும் நோக்கி ஏற்படுகின்ற அவ்வகுப்பினரின் செலவீடுகளும் சம பெறுமதிகளில் அமைவதன் அடிப்படையில் வளர்ச்சியோ அல்லது பின்னடைவோ அற்ற, நிலையாக உள்ள, ஒரு பொருளாதாரத்தின் சம நிலையினைக் காண்பித்துள்ள குவெஸ்னே, இந்த அட்டவணையின் இடப்புறம் நோக்கி நிகழும் நில உடைமையாளர்களின் செலவீடுகளின் அதிகரிப்பானது தேறிய உற்பத்திப் பொருளின் உருவாக்கத்தின் மூலம் செல்வத்தின் அதிகரிப்பிற்கும் மறுபுறமாக அட்டவணையின் வலப்புறம் நோக்கி நிகழும் அவ்வகுப்பினரின் செலவீடுகளின் அதிகரிப்பானது செல்வத்தின் சுருக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பதனைக் காண்பிப்பதற்கு முயன்றுள்ளார்.

இயற்கைவாதிகளின் இப்பொருளாதார அட்டவணை தொடர்பான விளக்கங்களில் உள்ள சிலகுறைபாடுகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவையாகும். முதலாவதாக, இயற்கைவாதிகளைப் பொறுத்தவரையில் முதல்நிலைத்துறையில் ஈடுபடுத்தப்படும் பயிர்ச்செய்கையாளர், சுரங்கம் அகழ்வோர், மீன்பிடிப்போர் ஆகியவர்களின் உழைப்புக்கள் மட்டுமே உற்பத்தித் தன்மையுள்ள உழைப்பு எனவும், காரணம் அவை மட்டுமே தேறிய உற்பத்திப் பொருள் ஒன்றினை உருவாக்குவதாகவும் கருதியிருந்தமை இங்கு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார மிகையின் அதாவது தேறிய உற்பத்திப் பொருளின் உருவாக்கத்திற்கான மூலம் (source) தொடர்புடைய ஊழியத்தின் உழைப்பல்ல; மாறாக நிலம் அதாவது இயற்கையே என்ற கருத்தினையே இயற்கைவாதிகள் கொண்டிருந்தனர்[24]. அதனை ஏற்பதாயின், முதன் நிலைத்துறையின்

தேறிய உற்பத்திப் பொருள் உருவாக்கத்தில் உழைப்பின் பங்கு எதுவும் இல்லை என்றாகி விடுகின்றது. அதனால் உற்பத்தித்தன்மையுள்ள உழைப்பு, உற்பத்தித்தன்மையற்ற உழைப்பு என்ற அவர்களின் பாகுபாடும் கேள்விக்குரிய ஒன்றாகி விடுகின்றது. இப்பொருளாதார அட்டவணைக்கு உழைப்பின் இந்தப்பாகுபாடே அடிப்படையாக அமைந்திருப்பதனால் இந்த அட்டவணையின் செல்லுபடியாகும் தன்மையும் கேள்விக்குரியதாகின்றது. இரண்டாவதாக, நில உடைமையாளர்கள் வாடகையாகப் பெறும் வருமானமானது, இவர்கள் காடழித்து, நிலத்தினைப் பண்படுத்திப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக மாற்றுவதற்காக முன்னர் தாம் மேற்கொண்ட செலவீடுகளுக்காகப் பெறுகின்ற வருவாயாக அமைகின்றதேயாயின் தேறிய உற்பத்திப் பொருளை இயற்கையின் கொடையாகக் கருத முடியாதெனவும் இந்த முரண்பாட்டினை இயற்கைவாதிகள் கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டனர் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது[25]. மூன்றாவதாக, இப்பொருளாதார அட்டவணையினைப் பொருளாதார ஆய்வுகளில் வெவ்வேறு விடயத்துக்குப் பயன்படுத்தி, வெவ்வேறு முடிவுகளைப் பெற முடியும் என இயற்கைவாதிகள் பொதுப்படத் தெரிவித்திருந்தபோதும் அவர்கள் இதனை நடைமுறையில் குறிப்பாக எங்கும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை[26].

## வரிச்சீர்திருத்தப் பிரேரணை **(The Proposal for Tax Reform)**

இயற்கைவாதக் கோட்பாட்டின் பெரும் பகுதியினை ஒரு வரிவிதிப்புக் கோட்பாட்டு விளக்கமாகவே கருதக் கூடியதாக உள்ளபோது, அவர்களின் முழுமையான ஆய்வினை மிகப்பிரதானமான கூறாகவும் அதுவே அமைந்துள்ளது[27]. இயற்கைவாதிகளின் வரிச்சீர்திருத்தப் பிரேரணைக்கு ஒரு தர்க்க வலுவூட்டும் வகையில் உருவாக்கப்பட்டதே அவர்களின் பொருளாதார அட்டவணை எனக்கூறுவது பொருத்தமானதாக இருக்கக் கூடும். பிரான்சில் வருமானம், செல்வம்

என்பவற்றினையொட்டி வரிகளை விதிப்பதிற் காணப்பட்டிருந்த நடைமுறைப் பிரச்சினைகளும், பரம்பரை அடிப்படையில் உயர்குடிப் பிரபுக்கள் அந்நாட்டிற் பெற்றுவந்துள்ள வரிவிலக்குகளும் இயல்பாகவே அரசாங்க வரிகளின் பெரும்பகுதியினை வறிய சிறுவிவசாயிகள் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலைமையினை அங்கு ஏற்படுத்தியிருந்தது. பிரான்சில் நடைமுறையிலிருந்து வந்த வரிக்குத்தகை (tax farming) முறையானது[28] சாதாரண விவசாயிகள் மீது மேலதிக சுமையினை ஏற்படுத்திய அதேவேளை வரசேகரிப்பாளர்களைச் சென்றடைந்த வரிவருமானங்களும் ஒன்றில் உள்நாட்டிலோ அல்லது வெளிநாடுகளிலோ நிலையான சொத்துக்களிலும் உத்தேச நடவடிக்கைகளிலும் முடக்கப்படனவேயன்றி, உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. இத்தகைய போக்குகள் யாவும் விவசாய விளைபொருட்களுக்கான கேள்வியினைக் குறைத்து அத்துறை மேலும் வீழ்ச்சியடையவே வழிவகுக்கும் என இயற்கைவாதிகள் கருதினர்.

இக்கருத்தின் அடிப்படையிலேயே இயற்கைவாதிகள் பரம்பரை அடிப்படையில் வழங்கப்பட்டுவந்த நிலவரி விலக்குகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட வேண்டும் என முன்மொழிந்ததோடு, நிலங்கள் தொடர்பாகப் பிரான்சில் நடைமுறையிலிருந்துவந்த நிலங்கள தொடர்பான எல்லா வரிகளும் ஒரு ஒற்றைவரி (one single tax) மூலம் மறுவைப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் பிரேரித்தனர். சுருங்கக் கூறின், தேறிய உற்பத்திப் பொருள் மீது செல்லுபடியாகக் கூடியதான ஒற்றைவரியினைக் குவெஸ்னே பரிந்துரைத்தார்[29]. இயற்கைவாத முறையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இது எளிதாக விளங்கிக் கொள்ளப்படக்கூடிய ஒன்றேயாகும். அவர்களைப் பொறுத்தவரையில், உற்பத்தி நடவடிக்கைகளின்போது உருவாக்கிக் கொள்ளப்படும் புதிய செல்வமாக தேறிய உற்பத்திப் பொருள் மட்டுமே கருதப்பட்டது. உண்மையிற் பயிர்ச்செய்கையாளர்களின் மீது அரசாங்கம் வரிவிதிக்குமாயின்,

அது அவர்களின் அடுத்த போகப் பயிர்ச்செய்கைக்கான நிதியீட்டத்தினைப் பாதிப்பதன் மூலம் அடுத்த போகத்தில் உருவாக்கப்படக் கூடிய தேறிய உற்பத்திப் பொருளின் அளவினை, அதாவது புதிய செல்வத்தின் அளவினைக் குறைத்துவிடும் என இயற்கைவாதிகள் முடிவுசெய்தனர். மறுபுறமாக உற்பத்தித்தன்மையற்ற (sterile) உழைப்பினர் மீது அரசாங்கம் வரிவிதிப்பின், அதுவும் கூடப் பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்தான அவ்வகுப்பினரின் உணவுப் பொருட் கொள்வனவினைக் குறைப்பதன் மூலம் அடுத்த போகத்தில் உருவாக்கக் கூடிய தேறிய உற்பத்திப் பொருளைக் குறைவடையச் செய்துவிடும் என இயற்கைவாதிகள் கருதினர். இத்தகைய கருத்துக்களின் அடிப்படையிலேயே நில உடமையாளர்களின் மீது அதுவும் தேறிய உற்பத்திப் பொருளின் அடிப்படையில் மட்டுமே அரசாங்கம் வரிவிதிப்பினை மேற்கொள்ள வேண்டுமெனப் பரிந்துரைத்தனர்[30]. தேறிய உற்பத்திப் பொருள் தவிர்ந்த வேறு எந்த மூலங்களின் மீது அரசாங்கம் வரிகளை விதித்தாலும், அவ்வரிகள் யாவும் சாத்தியமான ஒரே வரிச்செலுத்தல் மூலமாக அமைகின்ற தேறிய உற்பத்திப் பொருளை நோக்கிப் பெயர்ச்சியடையும் என அவர்கள் கருதியதாகத் தெரிகின்றது.

ஒற்றைவரியின் அளவு பற்றியும் குறிப்பிட்டுள்ள இயற்கைவாதிகள் தேறிய உற்பத்திப் பொருளின் பெறுமதியில் மூன்றிலொரு பங்கிற்கு மிகைப்படாததாக அது அமைய வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். விவசாய உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்படுத்தி, அத்துறையின் உற்பத்தித் திறனை அதிகரிக்குமிடத்து, மொத்த அரசாங்கச் செலவீடுகளையும் நிதியீட்டம் செய்து கொள்வதற்கு ஒற்றைவரி மூலமான வரிவருவாய் போதுமானதென அவர்கள் கருதினர். இயற்கைவாதிகளைப் பொறுத்தவரையில், வரிகள் காரணமாக ஏற்படும் மக்களின் துன்பத்திற்கு வரிச்சுமையின் சமத்துவமற்ற பங்கீடே காரணமாக அமைவதாகக் கருதப்பட்டது[31]. ஒற்றைவரியானது நில உடமைவகுப்பினர் மீது மட்டுமே செல்லுபடி கொண்டதாக அமைவதனால் அது எல்லா வகுப்பினரிடையேயும்

வரிச்சுமையினைச் சமத்துவமாகப் பங்கிடவில்லை என்பது போல நிலைமை தோற்றமளித்தாலும், ஒற்றைவரியானது தேறிய உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியினை விடுவிக்கின்றதேயன்றி, அது எந்தவொரு வகுப்பினர் மீதும் எவ்வித பளுவினையும் சுமத்துவதில்லை என்பதே இயற்கைவாதிகளின் நிலைப்பாடாக இருந்தது[32].

## பணமும் வட்டியும் (Money and Interest)

பணமானது பிரதானமாக ஒரு பண்டமாற்று ஊடகம் என்றவகையில் அது தொடர்புடைய மூன்று வகுப்பினரிடையேயும் பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தினை இலகு படுத்துவதாக இயற்கைவாதிகள் கருதினர்[33]. மேலும், அவர்களின் கண்ணோட்டத்தில் ஒருவர் தனக்குத் தேவைப்படுகின்ற எந்தவொரு பொருளையும் பணத்தினைக்கொண்டு கொள்வனவு செய்ய முடிவதனால் பணம் ஒரு செல்வமாகக் கருதப்படக் கூடியதாகும்[34]. தனிநபராக இருப்பினும், ஒரு நாடாக இருப்பினும் பணத்தினைப் பெறுவதாயின், பரிமாற்றத்தின்போது எவற்றினையேனும் கையளிக்க வேண்டியுள்ளது[35]. சுருங்கக் கூறின் எதனையும் கைவிடாமல் எவரும் பணத்தினைப் பெற இயலாது. முதன் நிலைத்துறையின் உற்பத்திப் பொருட்களும், அவற்றின் வருடாந்த மீள் உற்பத்தியும் ஒரு நாட்டின் உண்மையான செல்வமாக இயற்கைவாதிகளினால் கருதப்பட்டபோது, அவற்றின் அளவு ஒரு நாட்டில் மாற்றமின்றியிருக்கின்றபோதுகூட அந்நாட்டில் பணத்தின் அளவு வீழ்ச்சியடையக் கூடும்[36]. இதனால் ஒரு நாட்டின் பண நிரம்பலின் அளவினைக் கொண்டு அந்நாட்டின் செல்வத்தினை மதிப்பிட முடியாது.

ஒரு நபரினால் பெறப்படும் ஒரு கடன் தேறிய உற்பத்திப்பொருள் ஒன்றினை உருவாக்கினாலேயன்றி, ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அக்கடனுக்கு வட்டி அறிவீடு செய்யப்படுவதனைக் குவெஸ்னே உள்ளடங்கலாக அனேக இயற்கைவாதிகள் நியாயப்படுத்தவில்லை[37]. கைத்தொழில் வர்த்தகம் ஆகியவற்றின்

உற்பத்தியில் ஈடுபடுத்துகின்ற மூலதனமானது அவர்களின் கண்ணோட்டத்தில் தேறிய உற்பத்திப்பொருள் எதனையும் உருவாக்காமையினால், இவ்விரு நோக்கங்கள் குறித்தும் கடன் பெறுபவர்களிடமிருந்து வட்டி அறவிடுவதென்பது உண்மையில் அவர்கள் மீது வரி ஒன்றினை விதிப்பதற்குச் சமமானதெனக் கருதப்பட்டது[38]. இதனால்தான் இயற்கைவாதிகள் தேறிய உற்பத்திப் பொருளை உருவாக்க முடியாதவை என தாம் வகைப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கு ஒன்றில் வட்டி அறவீடு முழுமையாகத் தடை செய்யப்படுவதனையோ அல்லது அதன்மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதனையோ பரிந்துரைத்தனர். இதனால் வட்டி அறவீடு சம்பந்தப்பட்வரையில் இயற்கைவாதிகள் தமது பொதுவான அரசாங்கத் தலையிடாக் கொள்கையிலிருந்து விதிவிலக்குப் பெறுகின்றனர்[39].

எவ்வாறாயினும் இயற்கைவாதிகளில் ரேர்கோ (Turgot) மட்டும் கடன்களுக்கு வட்டி அறவிடுவதனை வெளிப்படையாக நியாயப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்[40]. முதலின் உரிமையாளர் ஒருவர் தனது பணத்தினை இலாபகரமாக முதலீடு செய்வதற்குப் பல்வேறு மாற்று வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்ற நிலைமையொன்றில் அந்நபர் தனது முதலினைத்தான் முதலீடு செய்வதிலிருந்து பெறக்கூடிய வருமானத்தினைக் கடன்வழங்குவதிலிருந்து பெற்றுக் கொள்ள முடிந்தால் மட்டுமே தனது பணத்தினைத் தானே முதலீடு செய்யாமல் கடன கொடுப்பதற்கு அந்நபர் முன்வருவார் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே ரேர்கோ கடனுக்கு வட்டி அறவிடப்படுவதனை நியாயப்படுத்தினார்.

## பெறுமதிக்கோட்பாடு **(Theory of Value)**

இயற்கைவாதிகளின் பொருளாதார அட்டவணையில், பொருட்களின் பரிமாற்றங்கள் பண அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளபோதும்

அவர்கள் பொருட்களின் பயன் பெறுமதி (value in use) குறித்தே அக்கறை கொண்டிருந்தனர்[41]. இந்தவகையில் பின்வந்த காலங்களில் அடம் சிமித் அவர்களுடன் ஆரம்பித்து, தொடர்ச்சியாக நீண்டகாலம் ஒன்றிற்குப் பொருளாதார ஆய்வுகளில் அதிக முக்கியத்துவம் பெற்றுவந்துள்ள பண்டங்களின் பரிமாற்றப் பெறுமதி (value in exchange) யின் நிர்ணயம் தொடர்பாக குவெஸ்யேயும், ஏனைய இயற்கைவாதிகளும் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தவில்லை. பொதுவாக, சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பண்டங்களின் விலைகள் அப்பண்டங்களின் உற்பத்திச் செலவுகளின் பிரதிபலிப்பாகவே அவர்களினால் நோக்கப்பட்டது. எனில், அப்பண்டங்களை உற்பத்திசெய்வதிற் பங்குகொள்ளும் உழைப்பினரின் பிழைப்பு மட்டச்செலவு (subsistence costs) களின் கூட்டுப் பெறுமதிக்குச் சமமாகவே அப்பண்டங்களின் சந்தை விலைகள் அமைந்திருக்கும் எனக்கருதினர். பண்டங்களின் பரிமாற்றப் பெறுமதி நிர்ணயம் சம்பந்தப்பட்ட வரையில் இயற்கைவாதிகளில் ரேர்கோ அவர்களின் கருத்துமட்டும் ஏனைய சமகால இயற்கைவாதிகளின் பெறுமதி தொடர்பான கருத்துக்களிலும் சற்று முன்னேற்றகரமானதாக இருந்துள்ளது[42]. ரேர்கோ ஒரு பண்டத்தின் பெறுமதியினை மதிப்பிடுகின்றபோது பலகாரணிகளைக் கவனத்திற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தியுள்ளார்.

இறுக்கமான நோக்கில் இயற்கைவாதிகளின் குழாத்தினைச் சாராதவராயினும், இயற்கைவாதக் கோட்பாடுகள் சிலவற்றினை விஞ்ஞான பூர்வமான விளக்கங்களின் மூலம் பூரணப்படுத்தியவராகக் கருதப்படுகின்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எற்றீன் டீ கொண்டலக் (Etienne de Condillac) என்பவர் 1776 இல் பிரான்சிய மொழியிற் பிரசுரித்த தனது நூலில்[43] பெறுமதி தொடர்பான உளவியற் கோட்பாடொன்றினை முன்வைத்துள்ளார். கொண்டிலக் தனது நூலில் பெறுமதிபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"..............பெறுமதி என்பது (ஒரு பொருளின்) இயல்பான தன்மையன்று, அதனுடைய பயன் தொடர்பான எமது கருத்துணர்வினையே அது பிரதிபலிக்கின்றது. இப்பயன் என்பது எமது தேவையுடன் தொடர்புடையதாக உள்ளது. எமது தேவை விரிவாக்கமும், சுருக்கமும் அடைவதற்கேற்ப பயனும் முறையே அதிகரிக்கவும், குறைவடையவும் செய்கின்றது....."[44]

மேலும், அவர் பண்டங்களின் அருமையானது தேவைகளைப் பூர்த்தி செய்வதனைக் கடினமாக்குவதாகவும், அவற்றின் தாராளக் கிடைப்பனவு அதனை இலகுபடுத்துவதாகவும் கருதிய கொண்டிலக் பண்டங்களுக்கான கேள்வியுடன் தொடர்புபடுத்தும்போது அவற்றின் கிடைப்பனவின் அளவினைப் பொறுத்து, பண்டங்களின் பரிமாற்றப் பெறுமதிகள் உயர்வாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்தவகையில் அவர் பண்டங்களின் பரிமாற்றப் பெறுமதியின் நிர்ணயத்தில் மறைமுகமாகப் பண்டங்களின் எல்லைப் பயனைக் கவனத்திற் கொள்ள முயன்றுள்ளார் எனக்கருதுவது தவறாகாது. உண்மையில் எல்லைப்பயன் என்ற எண்ணக்கரு பரிமாற்றப் பெறுமதி நிர்ணயத்தில் உரிய இடத்தினைப் பெறுவதற்கு இங்கிலாந்தினைப் பொறுத்தவரை மேலும் சுமார் நூறு வருடங்கள் தேவைப்பட்டிருந்தது[45].

## கட்டற்ற வர்த்தகம் **(Free trade)**

உள்நாட்டு வர்த்தகமானது சமபெறுமதிகளிலான பொருட்களின் பரஸ்பர கைமாற்றமாகவே அமைவதனால், இதிற்சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பும் தாம் கொடுப்பதற்குச் சமபெறுமதியிற் 'கொள்வதனால்' அது செல்வம் எதனையும் தோற்றுவிப்பதில்லை என்ற இயற்கைவாதிகளின் கருத்து இங்கு ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உள்நாட்டு வர்த்தகத்தினைப் போன்றே, அவர்கள் நோக்கில், வெளிநாட்டு வர்த்தகமும் உண்மையான செல்வம் எதனையும் உருவாக்கமாட்டாது. ஆயினும்

இயற்கைவாதிகளே கட்டற்ற வெளிநாட்டு வர்த்தகத்தின் முன்னோடி ஆதரவாளர்களாகக் கருதப்படுகின்றனர். ஆயின் வெளிநாட்டு வர்த்தகமானது ஒரு நாட்டின் தங்க இருப்பினை அதிகரிக்கக் கூடியது என்ற வணிக வாதிகளின் கண்ணோட்டத்தின் அடிப்படையிலோ அல்லது இன்று பொதுவாகக் கருதப்படுவது போன்று கட்டற்ற வெளிநாட்டு வர்த்தகமானது அதிற் சம்பந்தப்படும் நாடுகள் ஒவ்வொன்றும் அதிக அளவிலும், சிறந்த தரத்திலும் பொருட்களைப் பெறுவதற்கு வகை செய்கின்றது என்ற காரணத்தின் அடிப்படையிலோ இயற்கைவாதிகள் கட்டற்ற வர்த்தகத்தினை ஆதரிக்கவில்லை என்பது கட்டாயமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறாயின், கட்டற்ற சர்வதேச வர்த்தகத்தினை இயற்கைவாதிகள் அடம்சிமித்திற்கு முன்னரே ஆதரித்தமைக்கு குறைந்தபட்சம் இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக, இயற்கை நியதிகளுக்கு ஒத்திசைவான முறையில் செயற்கையான, அவசியமற்ற கட்டுப்பாடுகள் அனைத்தும் தளர்த்தப்பட வேண்டும் எனவும் அதற்காக அரசாங்கம் தலையிடாக் கொள்கையினைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர்கள் கருதியதனால், அக்கருத்துக்களை அவர்கள் வெளிநாட்டு வர்த்தகத்தினையொட்டியும் விரிவுபடுத்தினர். இரண்டாவதாக, விவசாய விளைபொருட்களின் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் யாவும் தளர்த்தப்படுவதன் மூலம் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கும், அதன் மூலம் தேறிய உற்பத்திப் பொருளின் பெருக்கத்திற்கும் வகைசெய்ய முடியும் என அவர்கள் கருதியமை, வெளிநாட்டு வர்த்தகத்தினையொட்டிய கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதற்குச் சார்பாக அவர்கள் குரல் கொடுப்பதற்கு காரணமாயிற்று.[46]

பொதுவான வணிகவாதக் கருத்துக்களும், குறிப்பாக, அக்கருத்துக்களின் அடிப்படையில் உருவாகியிருந்த கோல்பேர்ட் அவர்களின் பிரான்சிய வணிகவாத வடிவமும் சாதகவர்த்தக நிலுவையினை ஏற்படுத்துவதற்காகப் பிரான்சில் அதன் வெளிநாட்டு வர்த்தகத்தினையொட்டி மிக இறுக்கமான கட்டுப்பாடுகள்

அமுற்படுத்தப்பட்டு வந்த வேளை ஒன்றில் கட்டற்ற சர்வதேச வர்த்தகத்திற்கு ஆதரவளிக்கும் இயற்கைவாதிகளின் கருத்துக்கள் அந்நாட்டில் வெளியிடப்பட்டமை கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். உண்மையில் இயற்கைவாதிகளைப் பொறுத்தவரையில் சாதகவர்த்தக நிலுவையானது புதிய செல்வம் எதனையும் தோற்றுவிப்பதில்லை என்பது மட்டுமல்ல அது விவசாயப் பொருட்களுக்கான கேள்வியினைக் குறைப்பதன் மூலம் செல்வத்தின் தேய்விற்கு வழிவகுக்கக் கூடிய ஒன்றாகவே கருதப்பட்டது[47] கட்டற்ற வர்த்தகத்திற்குச் சார்பாக வாதிக்கும் போதும் வணிகவாதிகளின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்கின்ற போதும் குவெஸ்னே அடம்சிமித்தின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான கருத்துக்களை முற்றிலும் ஒத்திருக்கக் காணப்படுகின்றார்[48]. ஒரு நாடு எந்தளவுக்கு வெளிநாட்டவர்களுக்குப் பொருட்களை விற்க முடிகின்றதோ அந்தளவுக்கே வெளிநாட்டவரிடமிருந்து அது பொருட்களை வாங்க முடியும் எனக் குவெஸ்னே தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தகதாகும்[49]. மேலும், குவெஸ்னே வெளிநாட்டு வர்த்தகமானது ஒரு எதிரியுடன் மேற்கொள்ளப்படும் யுத்தமாகக் கருதப்பட முடியாதெனவும், வெளிநாட்டு வர்த்தகத்தில் சாத்தியமான உயர்ந்தபட்சப் போட்டி காணப்பட்டால் மட்டுமே பொருள் விற்பனையாளனுக்கு உயர்வான விலை கிடைக்க முடியும் என்பதனால் ஒரு நாடு முழு அளவில் கட்டற்ற வர்த்தகத்தினை அனுமதிக்க வேண்டும் எனவும் கூறியிருப்பதன்[50] அடிப்படையில் நோக்கும்போது, கட்டற்ற சர்வதேச வர்த்தகத்தினை ஆதரிப்பதில் குவெஸ்னே அடம்சிமித்திற்கு முன்னோடியாக இருந்திருப்பதனை எளிதிற் புரிந்துகொள்ள முடியும்.

## முடிவுரை

'இந்த (இயற்கைவாத) முறைமையானது, அதன் எல்லா நிறைவற்ற தன்மைகளுடனும், அரசியற் பொருளாதாரம் தொடர்பாக இதுவரையில் பிரசுரிக்கப்பட்ட எழுத்தாக்கங்களில் அனேகமாக,

உண்மைக்கு மிகவும் நெருங்கியதாகக் காணப்படுகின்றது' என அடம்சிமித் குறிப்பிட்டுள்ளார்[51]. 'அரசியற் பொருளாதாரம்' என அக்காலத்தில் வழங்கபட்டு வந்த பொருளியல் ஒரு விஞ்ஞானபூர்வமான அறிவியலாகத் தோற்றம் பெறுவதற்கு, அவர்களுக்கு முற்பட்ட பிரதான குழாத்தினரான வணிகவாதிகளுடன் ஒப்பிடுகின்றபோது, இயற்கைவாதிகளின் மேலான பங்களிப்பினை அடம்சிமித் அங்கீகரித்திருப்பதனை இது காண்பிக்கின்றது. ஒரு வகையான உள்ளீட்டு, வெளியீட்டு அட்டவணையாக அமைந்து, வெவ்வேறு பொருளாதார வகுப்பினரிடையே இடம்பெறும் வருமானச் சுற்றோட்டத்தினைக் காண்பிக்கின்ற குவெஸ்னே அவர்களின் பொருளாதார அட்டவணையனாது உண்மையில் அடம்சிமித் அவர்களிலிருந்து தோன்றி வளர்ந்த பழம் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளின் எந்தப்பகுதியினை விடவும் நவீன பேரினப் பொருளியலுடன் மிக அதிகளவிற்குத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது (Phyllis Deane 1978:6) நவீன அரசியற் பொருளாதாரத்தினைத் தோற்றுவித்ததில் அடம்சிமித் வகித்துள்ள பங்கிற்குச் சற்றும் குறையாத பங்கினை குனெஸ்னேயும் வகித்துள்ளார் என்பதிற் சந்தேகமில்லை[52].

ஒரு நாட்டின் செல்வமானது முதன்நிலைத் துறையுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களை மட்டுமே உள்ளடக்குவதாக இயற்கைவாதிகள் கருதியமை குறைபாடுடையேதாயினும், வணிகவாதிகளின் செல்வம் தொடர்பான வரையறையுடன் ஒப்பிடுகின்றபோது இது முன்னேற்றகரமானதேயாகும். வணிகவாதிகள் தேசிய நலனை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதாரத்திற் தீவிரமான அரசாங்கத் தலையீட்டினை வலியுறுத்தி வந்ததன் விளைவாகப் பெரும்பாலும் எல்லா ஐரோப்பிய நாடுகளும் பொருளாதாரப் பரப்பின்மீது தீவிர கட்டுப்பாடுகளை அமுற்படுத்தியிருந்த ஒரு காலப்பகுதியில், உலகவரலாற்றில், பழம்பொருளியலாளருக்கு முன்னரே இயற்கைவாதிகள் அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையினை முன்வைத்தமை அரசியல் பொருளாதார இயலுக்கு அவர்கள் மேற்கொண்ட இன்னொரு முக்கிய பங்களிப்பாகக் கருதக் கூடியதாகும். மேலும்,

அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கையினை அவர்களே முதன் முதலில் சர்வதேச வர்த்தகத்திற்கும் விரிவுபடுத்தி, கட்டற்ற வர்த்தகக் கொள்கையினை முன்வைத்தமையும் இயற்கைவாதம் தொடர்பான மதிப்பீடொன்றில் கட்டாயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

விவசாயத்துறைக்கு இயற்கைவாதிகள் அளித்திருந்த கூடுதல் முக்கியத்துவம் நவீன கைத்தொழில் யுகம் ஒன்றிற்குப் பொருத்தமற்றதாக இருப்பினும், உலகிற் கைத்தொழிற் புரட்சி என்பதொன்று தோன்றுவதற்கு முன்னர் விதிவிலக்கில்லாதவாறு எல்லா நாடுகளும் விவசயாத்தினையே முதன்மைப் பொருளாதார முயற்சியாகக் கொண்டிருந்த வேளையொன்றில் வெளிவந்து கொண்டிருந்த வணிகவாதக் கருத்துக்கள் விவசாயத்திற்கு மிகவும் சார்பற்றவையாக இருந்தபோது, விவசாயத்துறையினை முதன்மைப்படுத்தும் இயற்கைவாதிகளின் கருத்துக்கள் வெளிவந்தமை, அக்கருத்துக்களை மதிப்பிடும்போது நினைவிற் கொள்ளப்பட வேண்டியதாகும். தேறிய உற்பத்திப் பொருளின் உருவாக்கம் என்பதனைத் தகுதிவிதியாகக் கொண்டு அவர்கள் மேற்கொண்ட உற்பத்தித் தன்மையுள்ள உழைப்பு, உற்பத்தித் தன்மையற்ற உழைப்பு என்றபாகுபாடு மிகவும் தவறான ஒன்றேயாகும். இத்தகுதிவிதியின் அடிப்படையில் கைத்தொழிற்றுறை சார்ந்ததும், சேவைத்துறை சார்ந்ததுமான உழைப்புக்கள் அனைத்துமே அவர்களினால் உற்பத்தித் தன்மையற்ற உழைப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கைத்தொழிற் புரட்சிக்கு முற்பட்ட சமூகங்களில் பொருளாதார மிகை என்பது விவசாயத்துடன் மட்டுமே வரையறுக்கப் பட்டிருந்துள்ளபோது, தேறிய உற்பத்திப்பொருள் என்ற ஒரு எண்ணக்கருவின் மூலம் அதனை அடையாளம் செய்ததுடன் மெய்ப்பொருளாதார வளர்ச்சி என்பது உண்மையிற் பொருளாதார மிகையின் அதிகரிப்பே என்பதனை முதன் முதலில் அவர்களே சுட்டிக்காட்டி, அதன் பின்னர் ஆடம் சிமித், டேவிட் றிக்காடோ, கார்ல் மார்க்ஸ் எனத் தொடர்ந்துவந்த பல பொருளியலாளர்களின் கவனம் அதனையாட்டித் திரும்புவதற்கு இயற்கைவாதிகளே காரணமாக அமைந்தனர்.

1 ஒஸ்ரிய யுத்தம் (1741– 1748), இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகியவற்றுக்கிடையிலான காலனித்துவ யுத்தங்கள் (1754 – 1763), ஏழாண்டு யுத்தம் (1756 – 1783) ரஷ்ய – துருக்கி யுத்தம் (1768 – 1774) ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

2 Ernesto Screpanti and Stefano Zamagni (1993) An Outline of the History of Economic Thought (Translated by David Field) Clardedon Press, Oxford, 1995 P44.

3 குவெஸ்னே அவர்களின் 'Fermiers' 1756 , இலும் 'Grains', 'Hommes' என்பன 1757 இலும் 'The Tableau economique' 1758 இலும் வெளிவந்தன. எனினும் அவரின் 'Droit Naturel' 1765 இலும் 'Du Commerce' 1766 இலும் வெளிவந்தன.

4 Makto Itoh (1998) The Basic Theory of Capitalism. The Form and Substance of the Capitalist Economy. The Macmillan Press Ltd, London P7.

5 Charles Gide and Charles Rist (1915) A History of Economic Doctrines From the time of the Physiocrats to the Present day (Translatee by R. Richards) George G. Harrah & Co. Ltd. London 1960 p25.

6

மேலதிக விபரங்களுக்கு பார்க்க : Alexander Gray and A.E. Thompson The Development of Economic Doctrine (1931) ($2^{nd}$ Edition) Richard Clay Ltd., Bungay Suffolk 1980 pp 86-87.

7 Ingrid Hahne Rima (1978) Development of Economic Analysis Richard D. Irwin Inc, Homewood, Illinois p51.

8 Ibid p51

9 Charles Gide and Charles Rist (1915) op. cit p52

10 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit pp87-88

11 Ernesto screpanti and Stefano Zamagni (1973) op. cit p44

12 Charles Gide and Charles Rist (1915) op. cit p31

13 Ibid

14 Ingrid Hahne Rima (1978) op. cit p52

15 Ibid

16 Charles Gide and Charles Rist (1915) op. cit p31

17 சுரங்கம் அகழ்தல் மூலம் தேறிய உற்பத்திப் பொருள் ஒன்று உருவாக்கப்படுவதாக பெரும்பாலான இயற்கைவாதிகள் தெரிவித்துள்ளபோதும் ரேர்கோ (Turgot) போன்ற சிலர் இக்கருத்தில் உடன்படவில்லை. மேலதிக விபரங்களுக்கு: Ibid p34

18 Ingrid Hahne Rima (1978) op. cit p53

19 Ibid

20 Charles Gide and Charles Rist (1915) op. cit pp 32-33

21 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p93

22 லிவ்றாஸ் (Livres) என்ற நாணய அலகு பிரான்ஸ் நாட்டில் பிராங் (Franc) நாணய அலகுக்கு முன்னர் புழக்கத்திருந்துள்ள அந்நாட்டின் நாணய அலகாகும். (Livre 1 = a pound of silver)

23 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p93

24 Ingrid Hahne Rima (1978) op. cit p53

25 Charles Gide and Charles Rist (1915) op. cit p43

26 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p94

27 Charles Gide and Charles Rist (1915) op. cit p56

28 அறவிடப்படுகின்ற வரிகளில் ஒரு நிலையான தொகையினை வரிசேகரிப்பவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட்டு, அதன் மீதியினைத் தமதாக்கிக் கொள்ளும் ஒரு வரிஅறவீட்டு முறை இதுவாகும்.

29 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p98

30 Charles Gide and Charles Rist (1915) op. cit pp56-57

31 Ibid[32] மேலதிக விபரங்களுக்கு: Ibid pp59-62

33 Ingrid Hahne Rima (1978) op. cit p63

34 Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p95

[35] Ibid pp95-96

[36] Ibid p96

[37] Charles Gide and Charles Rist (1915) op. cit p51

[38] Ibid

[39] Ibid

[40] Ibid

[41] Ingrid Hahne Rima (1978) op. cit p63

[42] Ibid

[43] கொண்டிலர் அவர்கள் பிரான்சிய மொழியிற் பிரசுரித்த அந்நூலின் பிரான்சிய மொழித்தலைப்பு Le Commerce et le Gouvernment என்பதாகும்.

[44] Charles Gide and Charles Rist (1915) op. cit p66

[45] வில்லியம் ஜெவோன்ஸ் (William Jevons) 'அரசியல் பொருளாதாரக் கோட்பாடு' (The Theory of Political Economy) என்ற தலைப்பிலான நூல் எல்லைப்பயன் தொடர்பான ஆய்வினை உள்ளடக்கி முதன் முதல் 1871 இல் இங்கிலாந்திற் பிரசுரிக்கப்பட்டதனை இது குறிப்பிடுகின்றது.

[46] Ingrid Hahne Rima (1978) op. cit p61

[47] Ibid p60

[48] பார்க்க: Alexander Gray & A.E. Thompson op. cit p 95

[49] Ibid p97

[50] Alexander Gray and A.E. Thompson (1931) op. cit p104

[51] Phyllis Deane (1978) The Evolutions of Economic IDEAS, Cambridge University Press.

[52] Ibid